செ.வெ.எண்:-37/2020 நாள்:29.03.2020

திண்டுக்கல் மாவட்டம்

# கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக மதுபானக் கூடங்களை 01.04.2020 முதல் 14.04.2020 வரை மூட மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த பத்திரிக்கைச் செய்தி குறிப்பில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி, சென்னை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் அவர்களின் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த கடிதத்தில் அறிவுறுத்தியபடியும், திண்டுக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ, எப்.எல்.3ஏஏ மற்றும் எப்.எல்.10 உரிமம் பெற்ற உரிமத்தலங்கள் அனைத்தும் 01.04.2020 முதல் 14.04.2020 (14 நாட்கள்) மூடப்பட்டிருக்கும் என்றும் அன்றைய நாளில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படமாட்டாது என்றும், அன்றைய தினத்தில் விதிகளுக்கு மாறாக மது விற்பனை ஏதும் செய்யப்பட்டால் தொடர்புடைய உரிமத்தலங்களின் உரிமையாளர்கள் / நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**